கடந்து ஆண்டு பஞ்சமில்லை. இந்த ஆண்டு விவரம் தெரியவில்லை. அப்படியிருந்தால் அதற்கு சாத்தியமான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1968-ல் கொடுத்த வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்பது. இந்த வருஷம் அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : போன வருஷத்திலே ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு பஞ்சம் ஏற்படவில்லை என்பது தான் கலெக்டர் நமக்கு அறிவிக்கிற விவரம்.

Collectors' Conference

* 97 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the discussions which were held in regard to procurement of foodgrains in the Collectors' Conference held at Tiruchirappalli in 1967; and

(*b*) whether the procurement of Samba paddy was lesser in 1968 than in 1967?

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

திரு. என். ஆர் தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சியில் 1967-ல் நடந்த கலெக்டர்கள் மகாநாட்டில் உணவுக் கொள்முதல் பற்றி பேசியதென்ன?

(இ) சம்பா கொள்முதல் 1967-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1968-ல் குறைந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) திருச்சிராப்பள்ளியில் 1967 ஆகஸ்டு திங்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், கொள்முதல் திட்டத்தின்கீழ் குறிக்கோள் அளவு குறித்தும், போக்குவரத்து பற்றியும் விவாதிக்கப்பட்டது. உணவுத் தானியங்களைக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் திண்ணிய முறையில் கட்டுப்படுத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. குறுவைப் பயிர் கொள்முதல் செய்தல், உணவு தானியங்களைப் பிற இடங்களுக்கு அனுப்பும் திட்டம் முதலான ஏனைய பொருள்கள் குறித்தும் பொதுவாக விவாதிக்கப்பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு சாதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1968 ஆண்டு சம்பா கொள்முதல் ஓரளவு குறைவாகவே இருந்தது. சீர்கேடான பருவநிலையே இதற்கான முக்கிய காரணமாகும்.

3rd March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஒவ்வொரு ஆண்டும் 'இதற்கு முன் இருந்ததைவிட அதிகமாகக் கொள்முதல் செய்கிறோம்; அதிகமாக உணவு வினியோகம் செய்கிறோம்' என்று பேசியும், பத்திரிகையிலும் எழுதி வருகிறார்கள். ஆனால் அதற்கு மாறாக இப்போது கொள்முதலில் குறைந்து போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூல பதிலிலேயே அடங்கியிருக்கிறது. சீர் கேடான பருவ நிலையே காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Taladi Crops

* 98 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the statement made by the mirasdars of Nagapattinam area of Thanjavur district that 500 acres of Taladi Crops withered away as a result of the non-supply of water and the non-supply of oil-engines by the Agriculture Department is true?

தாளடிப் பயிர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்ட நாகபபட்டினம் பகுதி மிராசுதார்கள் தங்களுக்கு தண்ணீர் விடாததாலும், விவசாய இலாகா எண்ணெய்ப் பொறிகள் வழங்காததாலும் 500 ஏக்கர் தாளடிப் பயிர் காய்ந்துவிட்டது எனக் கூறுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வட கிழக்குப் பருவ மழை தவறிவிட்டதாலும், மேட்டூரில் நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டதாலும் (நாகப்பட்டினம் வட்டம் உட்பட), தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலும் காலம் கடந்து விதைத்த தாளடிப் பயிர் நீரின்மையால் பாதிக்கப்பட்டது. காலம் கடந்து விதைக்கப் பட்ட தாளடிப் பயிரைக் காக்க, பாசன வடிகால் வாயில்களிலிருந்து நீரை இறைப்பதற்கு வேளாண்மைத் துறையிடம் உள்ள எண்ணெய் இயந்திர விசையேற்றங்கள் அனைத்தையும் பயன் படுத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. நாகப்பட்டினம் கோட்டத்தைப் பொறுத்தவரையில் இது காரியத்திற்கு 29 எண்ணெய் இயந்திரங்கள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டன; இதனால் 1,170 ஏக்கர் நிலம் பயனடைந்தது.

Fertiliser Mixtures

* 99 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) the firms which were granted permission to produce fertiliser mixtures in Tamil Nadu;